கருக்கம்

உயர்கல்வித் துறை – 2019–20 ஆம் ஆண்டு மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் மையங்கள் நிறுவுவது – நிர்வாக ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (கே1)துறை

அரசாணை (நிலை) எண்.150

நாள்: 23.10.2020.
சார்வரி, ஐப்பசி 07.
திருவள்ளுவராண்டு, 2051

படிக்கப்பட்டவை :–

1. 2019–20 ஆம் ஆண்டு உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை எண்.20, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு, நாள் 02.07.2019.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடித எண் ந.க.எண் 17433/க்யூ3/2020, நாள் 08.09.2020.
3. பதிவாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதஎண் ததிநிப/அறிவிப்பு19/2020, நாள் 18.09.2020

---

ஆணை:–

02.07.2019 அன்று 2019–20 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் ஏனையவைகளுடன் பின்வரும் அறிவிப்பும் வெளியிடப்பட்டது :–

> "தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் துவங்கப்பட்டதிலிருந்து மிகக்குறைந்த செலவில் சமூகத்திற்கு தேவையான படிப்புகளை தொலைநிலைக்கல்வி மற்றும் திறந்தநிலைக்கல்வி மூலம் வழங்கி வருகின்றது. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் நெறிமுறைகளின்படி, கிராமப்புறம் மற்றும் ஏழ்மை நிலையிலுள்ள மக்கள், குறிப்பாக மாணவிகளுக்கு உயர்கல்வி வாய்ப்பினை குறைந்த செலவில், உயர்ந்த தரத்தில் வழங்கும் பொருட்டு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்கள் நிறுவப்படும். இம்மையமானது ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்."

. . . 2

2. மேற்கண்ட அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக பதிவாளர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்கள் அமைப்பதற்கு ஒருங்கிணைப்பாளர் மற்றும் விவரப்பதிவு இயக்குபவர் (Data Entry Operator) விவரங்களை அனுப்பியுள்ளார்.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட பதிவாளர், தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் அவர்களின் கடிதத்தில் கிராமப்புறம் மற்றும் ஏழ்மை நிலையில் உள்ள மக்கள் குறிப்பாக மாணவிகளுக்கு உயர்கல்வி வாய்ப்பினை குறைந்த செலவில் உயர்ந்த தரத்தில் வழங்கும் பொருட்டு, 91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

4. மேற்கண்ட தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பிற்கிணங்க, 91 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்தின் கற்போர் உதவி மையங்கள் மற்றும் தேர்வு மையங்களை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவுவதற்கு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கலாம் என முடிவு செய்து, அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பதிவாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-15
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநில (துணிக்கை-1) கணக்காயர், சென்னை-18
உள்உறை கணக்காயர், மாநில கணக்காயர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை-9.
<u>நகல்:</u>
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
உயர்கல்வித் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-9.
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/10/2020
பிரிவு அலுவலர்